**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்.**

**முன்னிலை : திரு.C.ஜெயப்பிரகாஷ், M.Com., M.L.,**

**சார்பு நீதிபதி, ஒட்டன்சத்திரம்**

**2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**2056 திருவள்ளுவர் ஆண்டு விசுவாவசு வருடம் பங்குனி மாதம் 13ம் நாள்**

**அசல் வழக்கு எண்.182/2023**

[CNR.No.TNDG190002722023]

P.சிவக்குமார் .... வாதி

// எதிராக //

1. R.பரமேஸ்வரி
2. R.விஜய் (எ) வீரக்குமார்
3. R.வித்யஸ்ரீ
4. R.வள்ளியம்மாள் .... பிரதிவாதிகள்

(இ.ம.எண்.03/2025 என்ற மனுவானது கடந்த 21.08.2025ம் தேதி அனுமதிக்கபட்டதின்பேரில் 2, 3 பிரதிவாதிகள் இளவர் நிலை நீங்கி உரிமை வயதை அடைந்து விட்டதால், 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் நீதிமன்ற காப்பாளராக நியமிக்கப்பட்டிருந்த வழக்கறிஞர் திரு.K.ராமராஜ் நீதிமன்ற காப்பாளர் பொறுப்பிலிருந்து நீக்கம் செய்யப்பட்டு வழக்குரை முதன் முறையாக திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது)

இந்த வழக்கானது கடந்த 08.06.2023ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 13.06.2023ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்னர் கடந்த 26.03.2026ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது வாதி தரப்பில் வழக்குரைஞர் திரு.L..ரமேஷ்குமார் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் பிரதிவாதி தரப்பில் வழக்குரைஞர் திருமதி.T.கனிமொழி அவர்கள் முன்னிலையாகியும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினால், கடந்த 30.01.2024ம் தேதி ஒருதலைபட்ச நிலைக்குட்படுத்தப்பட்டும், 4ம் பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும், அழைத்தும் முன்னிலையாகாத காரணத்தினால், கடந்த 11.07.2023ஆம் தேதி ஒருதலைபட்ச நிலைக்கு உட்படுத்தப்பட்டும், அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட

சமயத்தில் இளவர்களாக இருந்த 2, 3 பிரதிவாதிகள் தற்போது உரிமை வயதை அடைந்துவிட்ட நிலையில், 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் நீதிமன்ற காப்பாளராக நியமிக்கப்பட்டிருந்த வழக்கறிஞர் திரு.K.ராமராஜ் அவர்கள் நீதிமன்ற காப்பாளர் பொறுப்பிலிருந்து நீக்கறவு செய்யப்பட்டுள்ள நிலையில், 2, 3 பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும், அழைத்தும் முன்னிலையாகாத காரணத்தினால் கடந்த 14.11.2025ம் தேதி ஒருதலைபட்ச நிலைக்குட்படுத்தப்பட்டும், வாதி தரப்பு வழக்குரைஞரின் வாதுரை கேட்கப்பட்டும், வழக்குரை, சான்றாவணங்கள், வழக்கு கோப்பு ஆகியவைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டும், நாளது வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீ ர் ப் பு ரை

1. அசல் வழக்கானது கடனுறுதிச்சீட்டின்பேரில் தாவா தொகை, பின்வட்டி மற்றும் செலவுதொகை வேண்டி வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **வாதி தாக்கல் செய்த வழக்குரை சுருக்கம் :**

1ம் பிரதிவாதி 2, 3 பிரதிவாதிகளின் தாயார் ஆவார். 1ம் பிரதிவாதி 4ம் பிரதிவாதியின் மருமகள். 1ம் பிரதிவாதியின் கணவரும், 2 மற்றும் 3 பிரதிவாதிகளின் தந்தையும், 4ம் பிரதிவாதியின் மகனுமான R.ராமசாமி, வாதியிடமிருந்து அவரது அவசர நிமித்தம், குடும்ப செலவிற்காகவும், வியாபாரத்திற்காகவும் கடனாக ரொக்கம் ரூ.6,00,000/- பெற்றுக்கொண்டு அதற்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 100/-க்கு ரூபாய் ஒன்று வீதம் வட்டி சேர்த்து வேண்டும்போது வாதிக்காவது, வாதியின் உத்தரவு பெற்றவருக்காவது திருப்பி செலுத்துவதாக ஒப்புக்கொண்டு வாதியின் பெயருக்கு வாதியின் வீட்டில் வைத்து கடந்த 10.06.2020ம் தேதி தாவா கடனுறுதிச்சீட்டை எழுதிக்கொடுத்துள்ளார். வாதிக்கு வட்டியோ, அசலோ செலுத்தாமல், R.ராமசாமி என்பவர் கடந்த 14.09.2020 ஆம் தேதி பிரதிவாதிகளை வாரிசுகளாக விட்டு விட்டு இறந்துவிட்டார். கடனுறுதிசீட்டு கடனின் பலன்களை R.ராமசாமியுடன் சேர்ந்து பிரதிவாதிகள் அனுபவித்துள்ளனர். இறந்துபோன R.ராமசாமி விட்டுச்சென்ற சொத்துக்களை பிரதிவாதிகள் வாரிசுமுறைப்படி அனுபவித்து வருகின்றனர். R.ராமசாமி

இறந்தபிறகு, கடனுறுதிச்சீட்டிற்கான தொகை செலுத்தும்படி வாதி, பிரதிவாதிகளிடம் கேட்டும் தொகை செலுத்தாமல் காலம் கடத்தி வந்ததால் வாதி வழக்குரைஞர் வழியாக கடந்த 08.04.2023ஆம் தேதி பிரதிவாதிகளுக்கு பதிவஞ்சல் வழியாக அறிவிப்பு அனுப்பியுள்ளார். மேற்படி அறிவிப்பை பிரதிவாதிகள் கடந்த 10.04.2023ம் தேதி பெற்றுக்கொண்டு கடந்த 02.05.2023ம் தேதி கடனுறுதிசீட்டின் நகல் அனுப்ப வேண்டி பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளனர். வாதி தரப்பில் பதில் அறிவிப்பிற்கு கடந்த 31.05.2023ம் தேதி பதிவு அஞ்சல் வழியாக கூடுதல் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் கடனுறுதிசீட்டுக்குண்டான கடன் தொகை செலுத்தவில்லை. பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை வில்லங்க விற்கிரையம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டு வருவதால், தாவா தொகையினையும், வட்டி, பின்வட்டியும், செலவுதொகையும் வேண்டி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரை சுருக்கம்.**

வாதியின் வழக்கு மோசடியானதாகும். வாதி கேட்கும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல. 2, 3 பிரதிவாதிகள் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர மற்றவைகள் மைனர் 2, 3பிரதிவாதிகளால் மறுக்கப்படுகிறது. வழக்குரையில் மைனர் 2, 3 பிரதிவாதிகளின் தந்தை R.ராமசாமி கடந்த 14.09.2020ம் தேதி பிரதிவாதிகளை தனது வாரிசுகளாக விட்டுவிடடு இறந்துவிட்டார் என்பதை மட்டும் பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டுள்ளனர். மற்ற சங்கதிகள் மறுக்கப்பட்டுள்ளது. 3, 4 மைனர் பிரதிவாதிகளின் தந்தை வாதியிடமிருந்து கடன் எதுவும் பெறவில்லை. அதற்காக வாதிக்கு எந்த கடனுறுதிசீட்டும் கையெழுத்து செய்து கொடுக்கவில்லை. தாவா கடனுறுதிசீட்டில் உள்ள கையெழுத்து மைனர் 2, 3 பிரதிவாதிகளின் தந்தை R.ராமசாமியின் கையெழுத்து அல்ல. தாவா கடனுறுதிசீட்டு வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டதாகும். கடனுறுதிசீட்டில் உள்ள சாட்சிகள் வாதியின் நலனில் அக்கறை கொண்ட சாட்சிகள். மைனர் 2, 3 பிரதிவாதிகளின் தந்தை மைனர் 2, 3 பிரதிவாதிகளின் நலனுக்காகவோ, அவர்களுக்கான செலவிற்காகவே மற்றும் அவர்களின்

அக்கரைக்காகவோ எந்தவித கடனும் வாங்கவில்லை. மைனர் 2, 3 பிரதிவாதிகளின் கல்வி செலவுகளையும் அவர்களின் தாத்தா, பாட்டிகளே கவனித்து வந்துள்ளனர். லேட்.R.ராமசாமிக்கு மைனர் 2, 3 பிரதிவாதிகளின் நலன்களுக்காக கடன் வாங்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. மைனர் 2, 3 பிரதிவாதிகள் தங்களுக்கு பாத்தியப்பட்ட பூர்வீக நிலங்களை விற்கவேண்டிய அவசியம் எதுவும் ஏற்படவில்லை. தற்போது தங்களது நிலங்களிலிருந்து வரும் வருமானத்தை வைத்தே மைனர் 2, 3 பிரதிவாதிகள் தனது கல்வி செலவுகளையும் அத்தியாவசிய செலவுகளையும் செய்து வருகிறார்கள். 2, 3 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் வாதி கடனுறுதிசீட்டை வாதி மற்றும் சாட்சிகளின் கூட்டுசதியின் பேரில் மோசடியாகவும், போர்ஜரியாகவும் உற்பத்தி செய்துள்ளார். வாதி 2, 3 பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல. வாதியின் வழக்கை 2, 3 பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4. வழக்குரை, எதிர்வழக்குரை ஆகியவைகளை பரிசீலனை செய்து, கடந்த 21.02.2025ஆம் தேதியன்று கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது.**

**1. தாவா கடனுறுதிசீட்டின் அடிப்படையில் வாதிக்கு தாவா தொகை, வட்டி, பின்வட்டி, செலவுதொகை வாதிக்கு பிரதிவாதி செலுத்த கடமைப்பட்டவரா?**

**2. தாவா கடனுறுதிசீட்டில் உள்ள கையொப்பம் போர்ஜரியாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக பிரதிவாதி கூறுவது சரியா?**

**3. வாதிக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் என்ன?**

**5.** வாதி தரப்பில், வாதி தன்னை வா.சா.1 ஆக விசாரித்து, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 சான்றாவணங்கள் குறியீடு செய்தும், கடனுறுதிசீட்டில் சாட்சியாக கையொப்பம் செய்துள்ள பாலசுப்பிரமணி என்பவர் வா.சா.2 ஆக விசாரித்தும், கடனுறுதிச்சீட்டை எழுதியதும், சாட்சியுமாக கையொப்பம் செய்த சுரேஷ் என்பவர் வா.சா.3 ஆக விசாரித்தும் வழக்கு விசாரணை முடிக்கப்பட்டுள்ளது.

6. இவ்வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் 2, 3 பிரதிவாதிகள் மைனர்களாக இருந்த நிலையில், மேற்படி மைனர்களுக்கு நீதிமன்ற காப்பாளராக வழக்குரைஞர் திரு.K.ராமராஜ் அவர்கள் நியமனம் செய்யப்பட்டு, 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, அதனடிப்படையில் எழுவினாக்கள் வனையப்பட்டு, வாதி தரப்பு சாட்சியை குறுக்கு விசாரணை செய்வதற்காக வழக்கு விசாரணை உள்ள நிலையில், 2, 3 மைனர் பிரதிவாதிகள் உரிமை வயதை அடைந்துவிட்டதாக தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.02/2022 மனுவானது கடந்த 02.08.2025ம் தேதி அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி இ.ம.எண்.02/2022 என்ற மனுவில் கடந்த 02.08.2025ம் தேதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி 2, 3 பிரதிவாதிகளுக்கு நீதிமன்ற காப்பளாராக நியமிக்கப்பட்டிருந்த வழக்குரைஞர் திரு.K.ராமராஜ் அவர்கள் நீதிமன்ற காப்பாளர் பொறுப்பிலிருந்து நீக்கறவு செய்யப்பட்டுள்ளார். இந்நிலையில், 2, 3 பிரதிவாதிகளுக்கு இந்நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும் அழைத்தும் முன்னிலையாகாத காரணத்தினால் கடந்த 14.11.2025ம் தேதி ஒருதலைபட்ச நிலைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

7. இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில், வாதி வழக்குரையில் கோரியுள்ள தொகையும், பின்வட்டியும், செலவுதொகையும் வாதிக்கு, பிரதிவாதிகள் செலுத்த வேண்டுமா? என்பதே தீர்மானிக்க வேண்டிய பிரச்சனையாகும்.

8. **பிரச்சனைக்கான தீர்வுகள்:**

**1.1.** வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்து பார்க்கும்போது, கடந்த 10.06.2020ஆம் தேதி வாதியிடம், 1ம் பிரதிவாதியின் கணவரும், 2 மற்றும் 3 பிரதிவாதிகளின் தந்தையும், 4ம் பிரதிவாதியின் மகனுமான R.ராமசாமி என்பவர் அவசர நிமித்தம், குடும்ப செலவிற்காகவும், வியாபாரத்திற்காகவும் தொகை ரூ.6,00,000/- ரொக்கம் கடனாக பெற்றுள்ளதும், வேண்டும்போது வாதிக்காவது, வாதியின் உத்தரவு பெற்றவருக்காவது செலுத்துவதாக ஒப்புக்கொண்டு, கடனுறுதிச் சீட்டு எழுதிக்கொடுத்துள்ளது வா.சா.ஆ.1 ஆவணத்தின் வழியாக அறியமுடிகிறது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் அசல் ரூ.6,00,000/- தொகைக்கு

மாதம் ஒன்றுக்கு ரூ.100/-க்கு ரூபாய் ஒன்று வீதம் வட்டி சேர்த்து செலுத்துவதாக R.ராமசாமி என்பவரால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

**1.2.** வா.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டில் சாட்சியாக கையொப்பம் செய்துள்ள வா.சா.2 மற்றும் வா.சா.ஆ.1 கடனுறுதிசீட்டை எழுதியதும், சாட்சியுமாக கையொப்பம் செய்துள்ள வா.சா.3 ஆகியோர்கள் தங்களது சாட்சியங்களில், 1ம் பிரதிவாதியின் கணவரும், 2 மற்றும் 3 பிரதிவாதிகளின் தந்தையும், 4ம் பிரதிவாதியின் மகனுமான R.ராமசாமி என்பவர், வாதியிடமிருந்து தொகை பெற்றுக்கொண்டு, வாதியின் பெயருக்கு, வாதியின் வீட்டில் வைத்து கடனுறுதிச்சீட்டில் கையொப்பம் செய்து கொடுத்ததாக சாட்சியம் முன்னிலைப்படுத்தியுள்ளனர். மேற்கண்ட வா.சா.1 மற்றும் வா.சா.ஆ.2 வரையிலான சாட்சிகள் வாதியிடம், இறந்து போன R.ராமசாமி என்பவர் கடனுறுதிசீட்டின் பேரில் கடன் பெற்றதாக சொல்லியுள்ள சாட்சியம் ஏற்புடைய சாட்சியமாக உள்ளது.

**1.3.** வாதியிடம் கடன் பெற்ற R.ராமசாமி என்பவர் கடந்த 14.09.2020ஆம் தேதி இறந்துவிட்ட நிலையில், அவரது சட்டப்படியான வாரிசுகள் என்ற அடிப்படையில் இறந்துபோன R.ராமசாமி விட்டுச்சென்ற அசையாச்சொத்துக்களை பிரதிவாதிகள் அனுபவித்து வருவதால், வாதி, பிரதிவாதிகளிடம் தொகை செலுத்தும்படி கேட்டுள்ளது வா.சா.1 என்பவரின் சாட்சியத்தின் வழியாகவும், வா.சா.ஆ.2 வழக்குரைஞர் அறிவிப்பின் வழியாகவும் அறியமுடிகிறது. மேற்படி அறிவிப்பை பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டிருப்பது வா.சா.ஆ.3 சான்றாவணம் வழியாக அறிய முடிகிறது. வா.சா.ஆ.1 ஆவணமான கடனுறுதிச்சீட்டில் வேண்டும்போது தொகை செலுத்துவதாக ஒப்புக்கொண்டு வாதிக்கு, இறந்து போன R.ராமசாமி என்பவர் கடனுறுதிச்சீட்டை எழுதிக்கொடுத்துள்ளார் என்பது வா.சா.ஆ.1 ஆவணத்தின் வழியாக அறியமுடிகிறது. வாதி தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 சான்றாவணத்தின் வழியாகவும், வா.சா.1 முதல் வா.சா.3 ஆகியோர்களின் சாட்சிகள் வழியாகவும் வாதி, 1ம் பிரதிவாதியின் கணவரும், 2 மற்றும் 3 பிரதிவாதிகளின் தந்தையும், 4ம் பிரதிவாதியின் மகனுமான R.ராமசாமி என்பவருக்கு கடந்த 10.06.2020 ஆம் தேதி தொகை ரூ.6,00,000/- கடனாக கொடுத்துள்ளது வாதி தரப்பில்

நிரூபிக்கப்பட்டுள்ளது. வா.சா.1 சாட்சியத்தின் வழியாக இவ்வழக்கிற்கான வழக்குமூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

1.4. இறந்துபோன R.ராமசாமி என்பவரின் அசையாச் சொத்துக்களை பிரதிவாதிகள் வாரிசுமுறைப்படி பெறும் நிலையில், R.ராமசாமி என்பவர் வா.சா.ஆ.1 ஆவணத்தின் வழியாக வாதியிடம் பெற்ற கடனையும் பிரதிவாதிகள், இறந்துபோன R.ராமசாமி விட்டுச்சென்ற அசையா சொத்துக்கள் வழியாக திருப்பி செலுத்த கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். கடனுறுதிச்சீட்டில் மாதம் ஒன்றுக்கு ரூ.100/–க்கு ஒன்று வீதம் வட்டி சேர்த்து கூடிய வட்டியும், அசலும் செலுத்துவதாக இறந்து போன R.ராமசாமி என்பவரால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, வட்டியை பொறுத்து வாதி கணக்கிட்டுள்ளதை ஏற்றுக்கொள்வதே சரியானதாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. வாதி தரப்பில் முன்னிலைப்படுத்தியுள்ள வா.சா.1 முதல் வா.சா.3 சாட்சிகள் மற்றும் வா.சா.ஆ.1 சான்றாவணத்தின் வழியாக வாதி தரப்பு வழக்கானது நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில், வழக்குரை தொகை ரூ.8,14,200/– தொகையினையும், அசல்தொகை ரூ.6,00,000/–தொகைக்கு வழக்கு தாக்கல் செய்த நாள்முதல் தீர்ப்பாணை நாள்வரை உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் பிரிவு 34–ன் கீழாக ஆண்டொன்றுக்கு 9% வட்டியும், தீர்ப்பாணை நாள்முதல் தொகை வசூலாகும் நாள்வரை ஆண்டொன்றுக்கு 6% வட்டியும், வழக்கின் செலவுதொகையும் வாதிக்கு, பிரதிவாதிகள் இறந்துபோன R.ராமசாமி விட்டுச்சென்ற அசையாச்சொத்துக்கள் வழியாக செலுத்த வேண்டும் என்று தீர்மானிப்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

9. முடிவில்,

**வழக்குரை தொகை ரூ.8,14,200/– தொகையினையும், அசல் தொகை ரூ.6,00,000/– தொகைக்கு வழக்கு தாக்கல் செய்த 08.06.2023 நாள்முதல் தீர்ப்பாணை நாளான 27.03.2026ஆம் நாள்வரை ஆண்டொன்றுக்கு 9% வட்டியும், தீர்ப்பாணை நாள் முதல் தொகை வசூலாகும் நாள் வரை ஆண்டொன்றுக்கு 6% வட்டியும், வழக்கின் செலவு தொகையும் வாதிக்கு,**

**பிரதிவாதிகள் இறந்துபோன R.ராமசாமி விட்டுச்சென்ற அசையாச் சொத்துக்கள் வழியாக செலுத்த வேண்டும் என்று வாதியின் வழக்கு செலவுதொகையுடன் அனுமதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27ஆம் நாள் அவையறிய திறந்த நீதிமன்றத்தில் தீர்ப்புரை பகரப்பட்டது.

C JAYAPPRAKASH Digitally signed by C JAYAPPRAKASH Date: 2026.03.27 19:05:31 +0530

**சார்பு நீதிபதி,**
**ஒட்டன்சத்திரம்**

**வாதி தரப்பு சாட்சிகள் :**

| | | | | |
|---|---|---|---|---|
| வா.சா.1 | – | P.சிவக்குமார் | – | வாதி |
| வா.சா.2 | – | பாலசுப்பிரமணி | – | சாட்சி |
| வா.சா.3 | – | சுரேஷ்குமார் | – | சாட்சி |

**வாதி தரப்பு சான்றாவணங்கள் :**

| | | | |
|---|---|---|---|
| 1 | 10.06.2020 | வாதியிடம் ராமசாமி கடனாக ரொக்கம் ரூ.6,00,000/– பெற்றுக்கொண்டு வாதியின் பெயருக்கு எழுதிக்கொடுத்துள்ள தாவா கடனுறுதிசீட்டு – (செல் எதுவும் இல்லை) – அசல் | வா.சா.ஆ.1 |
| 2 | 08.04.2023 | வாதி தனது வழக்குரைஞர் வழியாக பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்குரைஞர் அறிவிப்பு – அலுவலக நகல் | வா.சா.ஆ.2 |
| 3 | 10.04.2023 | பிரதிவாதிகள் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டைகள் எண்ணிக்கைகள் –4 – அசல் | வா.சா.ஆ.3 |
| 4 | 02.05.2023 | பிரதிவாதி தனது வழக்குரைஞர் வழியாக அனுப்பிய பதிவுஞ்சல் பதிலறிவிப்பு – அசல் | வா.சா.ஆ.4 |
| 5 | 31.05.2023 | வாதி தனது வழக்குரைஞர் வழியாக அனுப்பிய பதிவஞ்சல் பதிலறிவிப்பு – அசல் | வா.சா.ஆ.5 |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சி : இல்லை**
**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் : இல்லை**

C JAYAPPRAKASH Digitally signed by C JAYAPPRAKASH Date: 2026.03.27 19:05:36 +0530

**சார்பு நீதிபதி,**
**ஒட்டன்சத்திரம்**